# Tamil - 304

# தமிழ் - மேல் நிலைக்கல்வி

# (அக மதிப்பீடு) **Tutor Marked Assignment**

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) சிறுகதை இலக்கியம் குறித்து எழுதுக. (பாடம் 26)

   (ஆ) விளம்பர உத்திகள் குறித்து எழுதுக. (பாடம் 30)

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) இணைய வழித்தமிழ் குறித்து எழுதுக. (பாடம் 32)

   (ஆ) மதுரைத் திட்ட மின் நூலகம் குறித்து எழுதுக. (பாடம் 33)

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) மின் அஞ்சலின் பயன்கள் குறித்து எழுதுக. (பாடம் 34)

   (ஆ) அழைப்புச் சேவை மையச் செயல்பாடுகள் குறித்து எழுதுக. (பாடம் 36)

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

   (அ) முத்துலெட்சுமி ரெட்டி பெண்கள் முன்னேற்றத்திற்காக ஆற்றிய தொண்டைப் பற்றி விவரிக்க. (பாடம் 19)

   (ஆ) காற்று மாசுபடுதல் குறித்து கட்டுரை வரைக. (பாடம் 20)

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

   (அ) செயற்குழு கூட்டத்திற்கான நிகழ்வுக் குறித்து மாதிரி ஒன்றினை தயார் செய்க. (பாடம் 41)

   (ஆ) கீழ்கண்ட பகுதியை படித்து மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக. (பாடம் 16)

நூல் நிலையங்கள் நம் நுண்ணறிவை வளர்ப்பன. மனத்தின் எண்ணங்களைச் சீர்செய்வன. பழங்காலத்தில் எகிப்து, பாபிலோனியா போன்ற நாடுகளில் களிமண்ணால் ஏடுகள் செய்து, எழுதி நூல் நிலையங்கள் அமைத்தனர். பழங்காலக் கோயில்களிலும் மடங்களிலும் நூல் நிலையங்கள் காணப்பட்டன.

நூல் நிலையங்கள் நல்ல சூரிய ஒளிபடும் இடங்களில் அமைய வேண்டும். நல்ல காற்றோட்டம் கிடைக்க வேண்டும். மக்கள் அமைதியாக உட்கார்ந்து, படிப்பதற்கு ஏற்ற இருக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். பார்ப்பதற்கு அழகான தோற்றம் உடையனவாய் அமைய வேண்டும்.

நூல் நிலையங்கள் நல்ல சூரிய ஒளி படும் இடங்களில் அமைய வேண்டும். நல்ல காற்றோட்டம் கிடைக்க வேண்டும். மக்கள் அமைதியாக உட்கார்ந்து, படிப்பதற்கு ஏற்ற இருக்கைகளைக் கொண்டிருக்க வேண்டும். பார்ப்பதற்கு அழகான தோற்றம் உடையனவாய் அமைய வேண்டும்.

மக்கள் அனைவராலும் தமக்கு வேண்டிய நூல்கள் அனைத்தையும் வாங்குவதற்கு உரிய பொருளாதார வசதி கிடையாது. எனவே மக்கள் தாம் விரும்பும் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க நூல் நிலையங்கள் பெரிதும் பயன்படுகின்றன. அறிவியல், அரசியல், வரலாற்றியல், கணக்கியல், பொருளியல், சமூகவியல் போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த அறிவு நூல் நிலையங்கள் மூலம் கிடைக்கின்றது. மக்கள் தம் அறிவைப் பெருக்க நூல் நிலையங்கள் தூண்டுகோல்களாக அமைகின்றன. நாவல்கள், சிறுகதைகள், நகைச்சுவைத் துணுக்குகள் போன்றவற்றைப் படித்து மக்கள் தம் பொழுதை நல்ல முறையில் கழிக்க நூல் நிலையங்கள் உதவுகின்றன. கட்டுரைகள் எழுதுவதற்கேற்ற குறிப்புகளைத் திரட்ட நூல் நிலையங்கள் உதவுகின்றன.

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6

(அ) தன்விவரக் குறிப்பு படிவம் ஒன்றை தயார் செய்க. (பாடம் 15)

(ஆ) பின்வரும் கதையினைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க. (பாடம் 35)

விஜய நகரை கிருஷ்ணதேவராயர் என்ற அரசர் ஆட்சி செய்து வந்தார். பொதுமக்கள் அரசரிடம் எலிகளின் தொல்லை குறித்து கூறினர். எலிகளை ஒழிக்க வீட்டுக்கொரு பூனையும், பூனையை வளர்க்க பசுவையும், பசுவை வளர்க்க பணமும் கொடுக்கலாம் என்ற தலைமை அமைச்சரின் ஆலோசனையை அரசர் ஏற்றார். அரசவை கவி தெனாலிராமன் அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் வீண் செலவாகும் என்பதை யோசித்தார் அரசருக்குப் பூனையைக் கொண்டே நீதியை உணர செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தார்.

தெனாலிராமன், பசுவின் பாலை ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுத்தார். சூடான காய்ச்சிய பாலை ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுத்தார். சூடான காய்ச்சிய பாலைப் பூனைக்கு வைத்து பூனையைப் பயந்தோட வைத்தார்.

தெனாலிராமன் பூனையைப் பார்த்து அரசர் கோபமடைந்தார். அரசே! என் பூனை பால் குடிப்பதில்லை என்றார் தெனாலி. பால் குடிக்காத பூனையும் இவ்வுலகில் உண்டோ? என்றார் அரசர்.

அரசே! பாலை வெறுக்கிற பூனையும் இல்லை குடிகளை வருத்துகிற அரசரும் இல்லை. என்றார் தெனாலி.

தெனாலிராமன் தான் வளர்த்த பசுவின் பாலைக் குடித்து வளர்ந்த ஏழைக் குழந்தைகளைக் காட்டினார்.

அரசருக்கு உண்மை புரிந்தது. தம் தவற்றை உணர்ந்தார். குடிமக்கள் பணமும் காலமும் வீணானது தெரிந்தது. பசுவை மட்டும் கொடுத்திருந்தால் ஏழைக் குழந்தைகளும் ஏழை மக்களும் மகிழ்ந்திருப்பார்கள் என்ற நீதியை அரசர் உணர்ந்தார்.

(அ) அரசரிடம் குடிமக்கள் அளித்த புகார் என்ன?

(ஆ) தெனாலிராமன் பசுவின் பாலை யாருக்குக் கொடுத்தார்?

(இ) பூனைக்குப் பால் கொடுக்காததற்குத் தெனாலிராமன் அரசரிடம் கூறிய காரணங்கள் யாவை?

----------------